(ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்ட முன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்ட முன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க.பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க.பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) மழை, புயல் ஆகிய இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை மீதான விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 3-1-1994 ஆம் நாளன்று முன்மொழிந்த தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெரும் மழை, புயல் ஆகிய இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட இழப்புகளுக்கும், அதற்கு அரசு செய்த பணிகள் பற்றியும் ஒரு வெள்ளை அறிக்கை அரசின் சார்பில் அவையின் முன்வைக்கப்பட்டது. பல்வேறு உறுப்பினர்கள், 22 மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.